# பின்னவல பிரதேசத்தின் சூழல்சார் சுற்றுலா: வாய்ப்புக்களும் சவால்களும்

# Eco Tourism in Pinnawala Area: Opportunities and Challenges

**Kaleel. MIM [1] & Nijamir. K [2]**

[1,2]*Department of Geography*
*South Eastern University of Sri Lanka*
*kaleelmim@yahoo.com [1], knijamir@gmail.com[2]*

## Abstract

This study aims to achieve the objectives that (a) to identify the trend and opportunities of ecotourism in study area, (b) to find the challenges for ecotourism in study area and (c) proposing remedial measure to overcome the identified challenges. Both primary and secondary data were collected to this study. As primary data, questionnaire survey, direct observation and conversation were conducted among the tourists and respective organizations. Statistical reports, previous researches, web sources and books were used as the secondary data. The presence of Pinnawala Elephant Orphanage and Pinnawala Zoo are main aspects, increasing the opportunities for the tourism in the study area. Lack of knowledge about ecotourism, improper transportation, unsafe transportation, lack of hotels and food for international tourist are main challenges, identified by this study. To overcome the challenges many remedial measures have been proposed in this study.

Key words: **Ecotourism, orphanage, transportation, international tourist**

## அறிமுகம்

உலக அளவில் சுற்றுலாவானது எழுச்சி பெற்று வருகின்ற ஒரு துறையாக காணப்படுகின்றது. உலகலாவிய ரீதியிலான கணிப்பீட்டின்படி சர்வதேச சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை 6% ஆக உயிர்வடைந்துள்ளதோடு சுற்றுலாபிரயாணிகளின் வருகை 369 மில்லியன் ஆக உயர்வடைந்துள்ளது (World tourism Organization, 2017). சுற்றுலாவின் நோக்கத்தையும் அதன் தன்மைகளையும் அடிப்படையாக கொண்ட வகைப்பாடுகளில் சூழல்சார் சுற்றுலா முக்கியத்துவமிக்க ஒரு வகையாக காணப்படுகின்றது. 1970 களின் பிற்பகுதியிலிருந்து சூழல் சார் சுற்றுலாத்துறை என்ற பதம் அறிமுகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து உலகளாவிய ரீதியில் அதன் சிந்தனைகள் மற்றும் பிரயோகம் என்பன விரிவாக்கம் பெற்று வந்துள்ளது. அந்தவகையில் சூழல்சார் சுற்றுலாவின் பிரயோகம் இலங்கையிலும் கவனம் செலுத்தப்பட்டது.

சூழல்சார் சுற்றுலா எனப்படுவது "சுற்றாடலை பாதுகாக்கின்ற உள்ளூர்வாசிகளின் நல்வாழ்க்கைக்கு ஆதரவளிக்கின்ற அத்துடன் கல்வி மற்றும் பொருள் விளக்கத்துக்குட்பட்ட பொறுப்புவாய்ந்த இயற்கையான பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் ஓர் பிரயாணமாகும்" (International Ecotourism Society-2017).



ISBN 978-955-627-120-1

இச்சூழல்சார் சுற்றுலாவின் கொள்கைகளாக பௌதீக, சமூக, நடத்தைவாத மற்றும் உளவியல் தாக்கங்களை குறைத்தல், சுற்றாடல் மற்றும் கலாச்சார விளிப்புணர்வுகளை உருவாக்குவதோடு மதிப்பளித்தல், சாதகமான அனுபவங்களை சுற்றுலாப் பிரயாணிகளுக்கும் குறித்த பிரதேச மக்களிடையேயும் ஏற்படுத்தல் போன்றன காணப்படுகின்றன. அந்தவகையில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் சுற்றுலாத்துறைக்கு சாதகமான பிரதேசங்கள் காணப்படுவதோடு அவற்றை சூழல்சார் சுற்றுலாவாக மாற்றியமைத்து தற்காலத்திலும் எதிர்காலத்திலும் அதன் பயனை மக்கள் அடைந்து கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டு வருகின்றன. இன்று பல நாடுகள் சூழல்சார் சுற்றுலாவில் கவனம் செலுத்தி வருகின்றன. அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களை விஸ்தரிக்கும் செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதேவேளை தங்களது சுற்றாடல், சமூக கலாசார பண்பாட்டு பாதுகாப்புக்களிலும் கவனம் செலுத்துவதனால் சூழல் சுற்றுலா எண்ணக்கரு விருத்தியடைந்து வருகின்றது.

அந்தவகையில் இலங்கையின் கேகாலை மாவட்டத்தில் காணப்படும் பின்னவல பிரதேசத்தின் சூழல்சார் சுற்றுலாவின்போக்கு அதற்கான வாய்ப்புக்கள் மற்றும் சவால்கள் என்பவற்றின் தன்மைகளை கண்டறிவதற்காக இவ்வாய்வு முனைகின்றது.

பின்னவல பிரதேசத்தில் காணப்படும் யானைகள் காப்பகத்தினால் அதிகமான உள்நாட்டு மற்றும் சர்வதேச சுற்றுலாப் பிரயாணிகள் ஈர்க்கப்படுகின்றனர். இப்பிரதேசத்தில் அமைந்துள்ள யானைகள் காப்பகமானது ஆரம்ப காலத்தில் அதாவது 1972 ஆம் ஆண்டு முதன்முதலில் வில்பத்து தேசிய பூங்காவில் அமைந்திருந்தது. அதன் பின்னர் பென்தோட்ட பிரதேசத்துக்கு மாற்றப்பட்டு பின்னர் கொழும்பிலிருந்து தெற்காக 11 Km தூரத்தில் அமைந்துள்ள தெஹிவளை மிருகக்காட்சிச்சாலைக்கு மாற்றப்பட்டது. 1975 ஆம் ஆண்டு இலங்கை வன ஜீவராசிகள் திணைக்களம் பின்னவலப் பிரதேசத்தில் அதாவது தற்போது யானைகள் சரணாலயம் காணப்படுகின்ற இடத்திற்கு மாற்றியமைத்தனர். இதன் பின்னரான காலப்பகுதியிலிருந்து சுற்றுலாத்துறை இப்பிரதேசத்தில் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது (Pinnawala Elephant Orphanage, 2017)

பின்னவல பிரதேசத்தில் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட பின்னவல மிருகக்காட்சிசாலை காரணமாக இப்பிரதேசத்தின் சுற்றுலா இன்னும் எழுச்சியடைந்துள்ளது. இங்கு காணப்படும் விலங்குகளான சிறுத்தைகள், ஆந்தை, அன்னம், போன்றவற்றை பார்வையிட பல சுற்றுலாப்பிரயாணிகள் வருகின்றனர். இங்கு தரிசிக்கின்ற மாணவர்களுக்கு பல்வேறுபட்ட விலங்குகளின் நடத்தைகள், உயிர்ப்பல்வகைமை இளமையான விலங்குகளை எவ்வாறு பராமரித்தல் போன்ற அறிவு பகிரப்படுகின்றது ( Pinnawala Zoo, 2017). மேலும் போ எல்ல நீர் வீழ்ச்சி, மக்வூட்ஸ் தேயிலை நூதனசாலை (Mackwoods Tea Museum) சராதயல் கிராமத்தின் சுற்றுலா விடுதி (Saradiel village resort) தெலிவலை கோட்டை (Deliwala) விகாரை போன்றன பின்னவல பிரதேசத்தின் சூழல்சார் சுற்றுலாவுக்கு வலுச்சேர்க்கும் ஏனைய சுற்றுலா மையங்களாக காணப்படுகின்றன.

## ஆய்வுப் பிரதேசம்

இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டங்களில் ஒன்றான கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கண பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட கிராம நிலதாரி பிரிவாக பின்னவல கிராம சேவகர் பிரிவு காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் அழகிய இயற்கைத் தோற்றப்பாடுகள் காணப்படுவதனாலும் யானைகள் சரணாலயம் காணப்படுவதனாலும் சுற்றுலாத்துறைக்கு மிகவும் பிரபல்யம் பெற்று



ISBN 978-955-627-120-1

காணப்படுகின்றது. மேலும் பின்னவல மிருகக்காட்சிச்சாலை, போ எல்ல நீர் வீழ்ச்சி, மக்வூட்ஸ் தேயிலை நூதனசாலை, சாராதயல் கிராம சுற்றுலா விடுதி, தெலிவல்லை கோட்டை மற்றும் புவக்பிடிய தாவரவியல் பூங்கா போன்றனவும் சுற்றுலாப்பிரயாணிகளை கவரும் இடங்களாக காணப்படுகின்றன.

## ஆய்வின் நோக்கம்

### பிரதான நோக்கம்

- பின்னவல பிரதேச சூழல்சார் சுற்றுலாவின் போக்கையும் சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களையும் அடையாளம் காணல்.

### துணை நோக்கங்கள்

- பின்னவல பிரதேச சூழல்சார் சுற்றுலாவுக்கான சவால்களை இனங்காணல்.
- அடையாளம் காணப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல்

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் அளவு மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்வு நுட்பங்களினூடே பயன்படுத்தப்பட்டன.

### முதலாம் நிலைத்தரவு

100 நோக்க மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்துக்கள் மாதிரிகளிடையே விநியோகிக்கப்பட்டன.

மாதிரிகள் பின்வருமாறு விநியோகிக்கப்பட்டன.

- 30 - உள்நாட்டு சுற்றுலா பிரயாணிகள்
- 30 - வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள்
- 20 - வியாபாரிகள்
- 20 - பிரதேசவாசிகள்

மேலும், கலந்துரையாடல் நேரடி அவதானம் மூலம் முதலாம் நிலைத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### இரண்டாம் நிலைத் தரவுகள்


இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், செய்திப்பத்திரிகைகள், சஞ்சிகைகள், புள்ளிவிபரத்திரட்டுக்கள், பிரதேச செயலக அறிக்கைகள் மற்றும் கேகாலை மாவட்ட வருடாந்த செயலாற்று அறிக்கை என்பன பயன்படுத்தப்பட்டன.



ISBN 978-955-627-120-1


## முடிவும் கலந்துரையாடலும்

**பின்வல பிரதேசத்தில் சர்வதேச சுற்றுலாப்பிரயாணிகளின் வருகை 2010 – 2015**




உரு: 01

மேலுள்ள வரைபானது பின்னவல பிரதேசத்தில் 2010-2015 வரையான காலப்பகுதியில் வருகை தந்த சர்வதேச சுற்றுலாப்பயணிகளின் போக்கினை காட்டுகின்றது. அந்தவகையில் சர்வதேச சுற்றுலாப்பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டு வருகின்றமையை அறிந்து கொள்ளலாம்.





உரு: 02

உரு 02 உள்நாட்டு சுற்றுலாப்பிரயாணிகளின் வருகையினை காட்டுகின்றது. அந்தவகையில் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகை துரிதமாக வளர்ச்சி கண்டுள்ளது. 2013, 2014 ஆம் ஆண்டுகளில் கணிசமான உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளின் வருகையில் சரிவு காணப்பட்ட போதிலும் 2015




ISBN 978-955-627-120-1

ஆம் ஆண்டில் அது மீண்டும் உயர்வடைந்துள்ளது. ஒட்டுமொத்தமாக பின்னவல பிரதேசத்தில் உள்நாட்டு சுற்றுலாப்பிரயாணிகளின் வருகையும் உயர்வடைந்து வருகின்றது.




உரு: 03

உரு 03 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகளின் வருகையின் போக்கினை ஒப்பீட்டு ரீதியில் காட்டி நிற்கின்றது. அந்தவகையில் 2010 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகளின் வளர்ச்சியில் தொடர்ச்சியான அபிவிருத்தி காணப்படுகின்றது. வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகளின் வருகையை விட உள்நாட்டு சுற்றுலாப்பிரயாணிகளின் வருகையே அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.




உரு: 03

தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளிடம் வினாக்கொத்து விநியோகிக்கப்பட்டு சூழல்சார் சுற்றுலா தொடர்பான அறிவு மற்றும் நிலைப்பாடு என்பன அறிந்து கொள்ளப்பட்டன. அந்தவகையில் வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகள் உள்நாட்டு சுற்றுலாப்பிரயாணிகளை விட சூழல்சார் சுற்றுலா தொடர்பான அறிவினை



ISBN 978-955-627-128-1

கொண்டுள்ளனர். எனினும் அவதானத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் சூழல்சார் சுற்றுலா தொடர்பான அறிவு பெரும்பாலும் பிரயோகத்தில் இல்லை என்பது அறிந்து கொள்ளப்பட்டது.

**பின்னவல பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்கள்**

- பின்னவல யானைகள் சரணாலயம் காணப்படுகின்றமை
- 2015 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பின்னவல மிருகக்காட்சிசாலை
- விற்பனைக்கூடங்கள் சுற்றுலாப்பிரயாணிகளை ஈர்க்கின்றமை
- மொழிபெயர்ப்பு மற்றும் சுற்றுலா வழிகாட்டலுக்காக மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகள் காணப்படுகின்றமை
- போ எல்ல நீர் வீழ்ச்சி
- மக்வூட்ஸ் தேயிலை நூதனசாலை (Mackwoods Tea Museum)
- சராதயல் கிராமத்தின் சுற்றுலா விடுதி (Saradiel village resort)
- தெலிவல (Deliwala) கோட்டை விகாரை

சேகரிக்கப்பட்ட தரவுகளின் படி பின்னவல பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாவின் மூலம் பின்வரும் பொருளாதார வாய்ப்புக்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது.

- சிறியரக விற்பனையாளர்கள் பயன்பெறல் (பின்னவல பிரதேச உற்பத்தியாளர்கள் மற்றும் வெளியிடங்களில் இருந்த பின்னவல பிரதேசத்துக்கு விற்பனைக்காக வரும் விற்பனையாளர்கள்)
- தளர்பாடங்கள் மற்றும் கைவினைப் பொருட்களின் கேள்வி அதிகரிப்பு
- உணவகங்கள் மூலம் அப்பிரதேச குடியிருப்புகளுக்கு வருமானம் ஏற்படல்
- போக்குவரத்து மூலம் அப்பிரதேச மக்களின் முச்சக்கரவண்டிகள் மற்றும் கார்களுக்கான கூலிகள் (hire) அதிகரித்தல்
- மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகள் வருமானங்களை ஈட்டிக்கொள்ளக்கூடியதாக காணப்படுகின்றமை

**சூழல்சார் சுற்றுலாவுக்கான சவால்கள்**

சூழல்சார் சுற்றுலா என்பது சுற்றாடலுக்கு பங்கம் ஏற்படாத வகையில் சுற்றுலா பயணிகள் தங்களது சுற்றுலா செயற்பாடுகளை மேற்கொள்வதாகும். ஆய்வின்படி பின்னவல பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாவுக்கான பின்வரும் சவால்கள் கண்டுகொள்ளப்பட்டன.

- சூழல்சார் சுற்றுலாவினை மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணிகள் அதன் நியமங்களை பின்பற்றாத வகையில் தங்களது செயற்பாடுகளை வெளிப்படுத்தகின்றமையை அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது
- கண்ட இடங்களில் கண்மூடித்தனமாக குப்பைகளை வீசுதல்
- வெளிநாட்டு சுற்றுலாப்பிரயாணிகளுக்கான உணவு வகைகளின் தட்டுப்பாடு
- விடுதிகளின் தட்டுப்பாடு
- பொருத்தமான பாதுகாப்பு முறைமைகள் இன்மையால் அதிகமான திருட்டு மற்றும் வழிப்பறி போன்ற சட்டவிரோத செயல்கள் அதிகரிக்கின்றமை
- தாவரங்களுக்கு சேதங்களை உண்டு பண்ணுதல்



ISBN 978-955-627-120-1

- குறிப்பிட்ட பிரதேசங்களில் பேணப்பட வேண்டிய விதிகளை பேணாமை
- விலங்குகளை கோபமூட்டும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- போக்குவரத்து நெரிசல்
- பின்னவல யானைகள் சரணாலயத்தில் யானைகளின் கழிவுகள் சுற்றுலாப்பயணிகளுக்கு இடையூறாக காணப்படல்
- அனுமதி இன்றி யானைகளுக்கு உணவளிக்க முயலுவதன் மூலம் யானைகளுக்கு ஒவ்வாமை ஏற்படுகின்றமை

## முடிவுரையும் ஆலோசனைகளும்

### முடிவுரை

பின்னவல பிரதேசத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் மூலம் ஆய்வுக்கான நோக்கங்கள் அனைத்தும் ஆய்வு முறையியல் மற்றும் பகுப்பாய்வு மூலம் அடைந்து கொள்ளப்பட்டுள்ளன.

பின்னவல பிரதேசத்தின் சூழல் சுற்றுலாவுக்கான வாய்ப்புக்களாக அங்குள்ள யானைகள் காப்பகம், பின்னவல மிருகக்காட்சிச்சாலை, மற்றும் அப்பிரதேசத்தை சுற்றியுள்ள போ எல்ல நீர் வீழ்ச்சி, மக்வூட்ஸ் தேயிலை நூதனசாலை, சராதயல் கிராமத்தின் சுற்றுலா விடுதி, தெலிவலை கோட்டை, விகாரை போன்றன பின்னவல பிரதேசத்தின் சூழல்சார் சுற்றுலாவுக்கு வலுச்சேர்க்கும் ஏனைய சுற்றுலா மையங்களாக அடையாளம் காணப்பட்டன. இதன்மூலம் ஆய்வுப்பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாவுக்கான பல வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளன. அதேவேளை 2010-2015 வரையான சுற்றுலாப் பிரயானிகளின் வருகை தொடர்பான அறிக்கை மூலம் அதன் போக்கும் அடையானம் கண்டு கொள்ளப்பட்டுள்ளது.

பின்னவல பிரதேச சுற்றுலாவுக்கான சவால்கள் அடையாளம் காணப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வின் மூலம் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதற்கான நுட்ப முறைகள் ஆலோசனை அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளன.

### பின்னவல பிரதேசத்தில் சூழல்சார் சுற்றுலாவினை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

- சூழல் சார் சுற்றுலாவுக்கான தன்மைகளை சுற்றுலா பயணிகளிடம் விளக்குதல்
- சுற்றுலாப் பயணிகளுக்கான ஹோட்டல்களை அதிகமாக அமைத்தல் மற்றும் வெளிநாட்டு உணவுவகைகளை தயாரித்தல்
- திண்மக்கழிவகற்றல் பிரச்சினைகளை முகாமை செய்து, விளிப்புணர்வு பலகைகளை நடல்
- பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை வசதிகளை மேம்படுத்தல்
- உயிர்ப் பல்வகைமையை பாதிக்கும் செயற்பாடுகளை தடை செய்தல் (புகைத்தல் மற்றும் கோபமூட்டல்)
- யானைகள் காப்பகத்தில் யானைகளின் கழிவுகளை முகாமை செய்தல்
- போக்குவரத்து வசதிகளையும் வாகன வசதிகளையும் மேம்படுத்தல்
- மக்களிடையே விளிப்புணர்வுகளை முன்னேற்றல்



ISBN 978-955-627-128-1

- சுற்றுலாப் பயணிகள் இளைப்பாறும் கூடாரங்களை அமைத்தல்
- நடை பாதைகளை சீர் செய்தல்
- வாகன தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தல்
- பின்னவல பிரதேச சூழல் சுற்றுலா சம்மந்தமாக துண்டுப்பிரசுரம், கைநூல், சுற்றுலா வழிகாட்டல் கைபேடுகளை பிரசுரித்தல்
- வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்காக பயிற்சி பெற்ற வழிகாட்டல்களையும் மொழிபெயர்ப்புக்களையும் அமர்த்தல்
- சுற்றுலாப்பிரயாணிகளுக்கான பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல். இப்பிரதேசங்களில் போக்குவரத்தினை மேற்கொள்ளும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப்பயணிகள் அதிகமாக வழிப்பறிச்சம்பவங்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் துரிதமான முறையில் முன்னெடுத்தல்
- இப்பிரதேசத்தில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**உசாத்துணைகள் (References)**


Bandara, R. (2008) *wildlife based recreational local economic development: A survey*, Karunaratna and Sons Ltd, Homagama

Bhatia, A.K. (1985) Tourism: *A community approach*, routledge, New York

Department of National zoological Garden. (2005) *Guide and map of Elephant orphanage*, Imashi Publications, Dehiwala

Maw fort. (2003) *Tourism and sustainability development and new tourism in the third world*, Routledge, London

Sri Lanka Tourism Board., (2005) *Sri Lanka tourism annual statistical Report*, Colombo

The international ecotourism society (2017): http://www.ecotourism.org/

Pinnawala Elephant Orphanage 2017: http://nationalzoo.gov.lk/elephantorphanage/

Pinnawala zoo 2017: http://nationalzoo.gov.lk/pinnawalazoo/

World Tourism Organization (2017) http://media.unwto.org/press-release/2017-07-14/strong-tourism-results-first-part-2017




ISBN 978-955-627-120-1